2016 ஜனவரி 23]

2,260 பாதுகாப்புப் பயிற்சிகள் நடத்தப்பட்டு, 1,03,039 தொழிலாளர்கள் அந்தப் பயிற்சிகள் மூலமாகப் பலன் பெற்றிருக்கின்றனர். அந்தத் தொழிலாளர்களுக்கு எந்த இடர்பாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகப் பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவியேற்றதற்குப் பின்னர், 495 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, 24,829 தொழிலாளர்கள் பலன் பெற்றிருக்கின்றனர்.

அதைப்போன்று, சீனப் பட்டாசுகள் வருவதைத் தடுக்கின்ற வகையில் நடமாடும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலமாகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான், எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையில், தொழிலாளர்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறது. அதைப்போன்று, விபத்துகள் குறைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். சென்ற காலங்களில் 5,155 விபத்துகள் தமிழகம் முழுவதும் நடைபெற்றன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின், கனிவான பார்வையை துறையின் மூலமாகச் செலுத்தி பல்வேறு நடவடிக்கைகள் எடுத்த காரணத்தினால், 2,063 ஆக அந்த விபத்துகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

34—

சொந்தக் கட்டடம்

***59773—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கி வருவதால், புதிய கட்டடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'என் இல்லமும், உள்ளமும் தமிழகம்தான்' என உலகுக்கு உரக்கச் சொல்லி, 'தன் நலன் கருதாமல், தமிழர் நலன் ஒன்றுதான் தன் நலன்' என தியாக வாழ்க்கை வாழ்ந்து, பொற்கால ஆட்சி நடத்தும் (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனத் தலைவி, பொன்னியின் செல்வி, மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி நின்ற' வள்ளல் பெருமான் மறைந்தும் மறையாமல் நிலைத்து நிற்கிற கடலூர் மாவட்டம், வடகிழக்குப் பருவமழையின் காரணமாகப் பெரும் சேதமடைந்தது என்ற செய்தி வெளியான உடனேயே, போர்க்கால அடிப்படையில், தீபாவளிப் பண்டிகை என்று கூடப் பார்க்காமல், "பொங்கும் தமிழர்க்கின்னல் விளைத்தால், சங்காரம் நிஜமெனச் சங்கே முழங்கு" என பாவேந்தன் பாரதிதாசன் வரிகளுக்கு இலக்கணமாக, தமிழகத்தினுடைய மூத்த அமைச்சர் பெருமக்களாகிய மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும்,

TRUTH ALONE TRIUMPHS

2016 ஜனவரி 23]

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் உடன் கடலூர் மாவட்டத்திற்கு அனுப்பி, வடகிழக்குப் பருவமழையினுடைய ஈரம் காய்வதற்குள்ளாகவே கடலூர் மாவட்ட மக்களின் வாட்டத்தைப் போக்கிய (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் காவல் தெய்வம், காவியத் தலைவி, உலகத் தமிழர்களுடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களுக்கு, கடலூர் மாவட்ட மக்களின் சார்பிலும், என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், உலக வங்கி நிதியுதவி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் பல்வேறு பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்பொழுது நடைபெறுகிற சீர்மிகு ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு, போதுமான இடம் அங்கே இருக்கின்ற காரணத்தினால், அரசு முன்வருமா; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 434 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்கள் உள்ளன. அதில் 230 அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 204 அலுவலகங்கள் வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குறிப்பிட்டதைப்போல, 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, உலக வங்கி உதவியுடன், மத்திய அரசின் உதவியுடன், அந்த நேரத்தில் கடலூர் மாவட்டத்தில் 14 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வந்ததில், கடலூர், அண்ணாகிராமம், பரங்கிப்பேட்டை, கம்மாபுரம், விருத்தாசலம் ஆகிய 5 திட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு one time grant ஆகப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டி முடித்தாகிவிட்டது. ஆனால், அதற்குப் பிறகு இதுபோன்ற சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசு எந்த நிதி ஒதுக்கீட்டையும் செய்யாமல், அதற்குப் பதிலாக வாடகையாக 3,490/- ரூபாய் என்று நிர்ணயம் செய்து, அதை மட்டுமே வழங்கிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான், அங்கே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்தமாகக் கட்டடம் கட்ட வேண்டுமென்று விரும்புவாரேயானால், மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதி என்று ஒரு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியின்மூலம் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பரிந்துரையுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவருடைய விருப்புரிமை நிதியிலிருந்து கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்திலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அளித்த பதிலிலேயே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியைப் பெற்று, கட்டடம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதை, மீண்டும் ஒரு முறை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

மகளிர் கல்லூரி

***50241**—**திரு. ப. சிவக்கொழுந்து:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதியில் மகளிர் கல்லூரி மற்றும் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில், கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி ஒன்றும், விடுதி ஒன்றும் துவக்குவது பற்றிய கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.*